7390

சுருக்கம்

விளையாட்டு – பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படும் விளையாட்டுத் துறைக்கான கட்டடப் பணிகளுக்கு நூற்றுவிழுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

அரசாணை (நிலை) எண்.14 நாள்: 11.4.2001

படிக்கப்பட்டவை:-

1. தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்), பொதுப் பணித் துறை, சென்னை–5 கடித எண்.உ.செ.பொ./டி9/55344/98, நாள்: 10.10.2000 மற்றும் 7.11.2000.
2. சேலம் மாவட்ட ஆட்சியரின் கடித எண்.146/92, நாள்: 22.2.2001
3. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக கடித எண்.2263/2001/ஆர்டி.10, நாள்: 19.2.2001.

---

ஆணை:–

தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்), பொதுப் பணித் துறை, படிக்கப்பட்டவை ஒன்றில் காணும் அவரது கடிதத்தில், விளையாட்டுத் துறைக்கான கட்டிடங்களை கட்டுகின்ற பொறுப்பு பொதுப் பணித் துறைக்கு உள்ளதென்றும், நாகப்பட்டினம் மற்றும் திண்டுக்கல் போன்ற மாவட்டத் தலைநகரங்களில் கட்டப்படும் மாவட்ட விளையாட்டு அரங்கங்கள் பொதுப் பணித் துறையால் கட்டப்படுகின்றதென்றும், எனவே தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திலுடைய எல்லா கட்டிடங்களையும் கட்டும் பணியை பொதுப் பணித் துறைக்கு ஒப்படைக்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் பொதுப் பணித் துறை, ஏனைய துறைகளின் பணிகளுக்கு 12.5 சதவிகிதம் நூற்று விழுக் கட்டணம் வசூலிக்கின்றதென்றும், அரசாணை (டி) எண்.247, பொதுப் பணித் துறை, நாள்: 31.8.2000–ல் காவல்துறையினரின் உயர் கல்வி நிலையத்திற்காக கட்டப்படும் கட்டிடப் பணிகளுக்கும், அரசாணை (டி) எண்.77, பள்ளிக் கல்வித் துறை, நாள்: 8.3.2000–ல் பொது நூலகத் துறைக்கு கட்டப்படும் நூலகக் கட்டிடங்களுக்கும் நூற்று விழுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது என்றும், இதேபோன்று தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திலுடைய கட்டிடங்களுக்கு கட்டுவதற்கும் நூற்று விழுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசாணை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2) சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் 6.1.2001-ம் நாளிட்ட அவரது கடிதத்திலும், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் 19.2.2001-ம் நாளிட்ட அவரது கடிதத்திலும், முறையே சேலம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத் தலைநகரங்களில் கட்டப்படும் மாவட்ட விளையாட்டு வளாக கட்டுமானப் பணிக்கு பொதுப் பணித் துறையால் வசூலிக்கப்படும் நூற்று விதக் கட்டணத்திலிருந்து விலக்களித்து ஆணை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளனர்.

3) ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது அரசின் பொதுவான கொள்கையாகும். இத்தகைய மாவட்ட விளையாட்டு வளாகங்களை ஏற்படுத்த மைய அரசு 50 : 50 விகிதாச்சாரத்தின்படி உச்சவரம்பு மானியமாக ரூ.1.00 கோடி வரை மானியம் வழங்குகிறது. மலைப்பகுதியில் இத்தகைய மானியம் 75 : 25 என்ற விகிதாச்சாரத்தின்படி ரூ.1.50 கோடி வரை மைய அரசு மானியம் வழங்குகிறது. மாநில அரசு தனது அரசாணை (நிலை) எண்.9, கல்வித் துறை, நாள்: 5.1.1994-ன் மூலம் தன்னுடைய பங்காகக் கீழ்க்கண்டவாறு ஆணையிட்டுள்ளது:-

1. மைய அரசின் பங்கீடு ... 50 விழுக்காடு
2. மாநில அரசின் பங்கீடு ... 25 விழுக்காடு
3. விளையாட்டரங்கக் குழு பங்கீடு ... 25 விழுக்காடு
   (பொதுமக்களின் நன்கொடைகள்)

நடப்பாண்டில் சேலம், ஈரோடு, திருச்சி, மதுரை, நாகப்பட்டினம், திண்டுக்கல் ஆகிய இடங்களில் மாவட்ட விளையாட்டு வளாகம் மற்றும் நீச்சல் குளம் அமைக்க மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

4) பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் மற்றும் சேலம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் செயற்குறிப்புகளை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. மாவட்ட விளையாட்டு வளாகங்கள் மைய அரசின் மானியம், மாநில அரசின் மானியம் மற்றும் பொதுமக்களின் நன்கொடைகளிலிருந்து கட்டப்படுகிறது. நூற்று விதக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டால், அதன் மூலம் மிச்சமாகும் தொகையை விளையாட்டின் மற்ற வளர்ச்சிப் பணிகளுக்கு பயன்படுத்த முடியும். மேலும் பொது நூலகத் துறை கட்டிடங்கள் மற்றும் காந்திகிராம ஊரக கல்வி நிலைய கட்டிடங்கள் கட்டுவதற்கு நூற்று விதக் கட்டணம் செலுத்துவதிலிருந்து ஏற்கனவே விலக்களிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறைக்கு ஒப்படைக்கும் பட்சத்தில், அக்கட்டிடப் பணிகளுக்கு நூற்று விதக்

கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு ஆணையிடுகிறது. ஆனால் இக்கட்டிடப் பணிகளை பொதுப் பணித் துறை அத்துறையின் வழக்கமான பணியாளர்களைக் கொண்டு (Regular Staff) மேற்கொள்ள வேண்டும் என்றும், இப்பணிகளை மேற்கொள்ள தனிப் பணியாளர்கள் (Special Staff) அமர்த்தக் கூடாதென்றும் அரசு மேலும் ஆணையிடுகிறது.

5) இவ்வாணையானது பொதுப் பணித் துறையின் அ.சா.எண். 6/செ.(பொ.ப.கு)/2001-1, நாள்: 10.1.2001-ன் இசைவுடனும், நிதித் துறையின் அ.சா.எண்.161/நி.செ./[illegible]/2001, நாள்: 26.3.2001-ன் இசைவுடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கெ.அசோக் வர்தன் ஷெட்டி,
அரசுச் செயலர்.

பெறுநர்

உறுப்பினர் செயலர்,
தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்,
சென்னை-84.

தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்),
பொதுப் பணித் துறை, சென்னை-5.

மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம்

மாவட்ட ஆட்சித் தலைவர் நாகப்பட்டினம்,

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்

மாநிலக் கணக்காயர், சென்னை-18 / 35.

மாநிலக் கணக்காயர், சென்னை-18 (பெயரில்)

நகல்:-
அனைத்து மாவட்ட விளையாட்டு அலுவலர்கள்

பொதுப் பணித் துறை, சென்னை-9.

நிதித் துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

Sd/- ...
19.4.2001
பிரிவு அலுவலர்.